பே.சா.து.ந.க.எண்.பி2/2202/2021

பெருநகர சென்னை மாநகராட்சி
சிறப்பு திட்டங்கள் துறை

## அறிவிப்பு

மன்றத் தீர்மான எண்.122/2019 நாள்.19.02.2019ன்படி, சாலை பணிகள் மற்றும் கட்டடப் பணிகளை ஒருங்கிணைத்து ஒரே பதிவாக பதிவு செய்ய நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் வருடத்திற்கு *(Financial Year)* ஒரு முறை புதுப்பித்தல் நடைமுறையில் உள்ளது. முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஒப்புதல் நாள்.04.11.2021ன்படி, *Covid-19* கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு மற்றும் மற்றும் முழு பொது முடக்கம் காரணத்தாலும் 2019-2020ஆம் ஆண்டு ஒப்பந்ததாரர் பதிவினை *(Contractor Registration)* புதுப்பித்தவர்கள் *(Renewal)* 2020-2021ஆம் ஆண்டு ஒப்பந்ததாரர் பதிவினை புதுப்பிக்க தவறியவர்கள், இவ்வருடம் 2021-2022ஆம் ஆண்டுக்கான ஒப்பந்ததாரர் பதிவினை 31.12.2021க்குள் கீழ்காணும் ஆவணங்களை சமர்ப்பித்து புதுப்பித்துக் கொள்ளலாம்.

1. ஒப்பந்ததாரர் பதிவு நகல் *(Registration Certificate)*
2. முந்தைய ஆண்டு ஒப்பந்ததாரர் பதிவினை புதுப்பித்தல் நகல் *(Renewal Copy)*
3. செல்வ நிலைச் சான்றிதழ் *(Solvency Certificate)*
4. வில்லங்கச் சான்றிதழ் *(Encumbrance Certificate)*
5. சரக்கு மற்றும் சேவை வரி *(GST)* சான்றிதழ்
6. வருமானவரி சான்றிதழ் *(Income Tax Certificate)*
7. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ள விவரம் அல்லது பணிகள் செய்த / செய்து கொண்டுள்ள பணிகளின் விவரங்கள்
8. வகுப்பு-1 முதல் வகுப்பு-5 வரை உள்ள ஒப்பந்ததாரர்களின் பதிவினை புதுப்பிக்கும் கட்டணமாக ரூ.5000/-ம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
9. முதன்முறையாக (முதல் வருடம்) ஒப்பந்ததாரர் பதிவை புதுப்பிக்க தவறியவர்கள், ஒப்பந்ததாரர்கள் பட்டியிலிருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்படுவார்கள்.
10. இரண்டாம் முறை (இரண்டு வருடங்கள்) தொடர்ந்து ஒப்பந்ததாரர் பதிவை புதுப்பிக்க தவறியவர்கள், ஒப்பந்ததாரர்கள் பட்டியிலிருந்து நிரந்தரமாக நீக்கம் செய்யப்படுவார்கள்.

ஒம்/-B.V. பாபு / 16.11.2021
கண்காணிப்பு பொறியாளர்
சிறப்பு திட்டங்கள் / பாலங்கள்